# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010

## வளாகக் கல்வித் தேர்வுப் பிரிவு

**முனைவர் த. தெய்வீகன்**

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)


நாள். 25.11.2021

**சுற்றறிக்கை**

ந.எ.எண். தே3/2021 நாள்: 25.11.2021

பொருள்: 2019 - 2024 சேர்க்கை - ஒருங்கிணைந்த முதுகலைப் பாடப்பிரிவுகள் - இரண்டாமாண்டு நான்காம் பருவத் தேர்வுகள் - கால அட்டவணை வெளியிடுதல், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற விவரங்கள் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை : துணைவேந்தர் (பொ.) குழு ஆணை நாள் : 25.11.2021.

-----------

2019-2024 ஆம் ஆண்டு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல், இலக்கியம் ஆகிய துறைகள் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் நடத்தப்பெறும் ஒருங்கிணைந்த முதுகலை மாணவர்களுக்கான இரண்டாமாண்டு நான்காம் பருவத் தேர்வுகள் 06.12.2021 முதல் 13.12.2021 வரையிலான ஏழு நாள்கள் வளர்தமிழ்ப்புலத்தில் நடைபெறவுள்ளன.

இத்தேர்வுகளுக்கான கால அட்டவணை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. தேர்வுகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டண விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளன. தேர்வுகள் குறித்த விவரங்களை மாணவர்களுக்குத் தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### அ) தேர்வுக் கட்டண விவரம்

**இடம் : வளர்தமிழ்ப்புலம்**

**ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ், வரலாறு**

இரண்டாமாண்டு நான்காம் பருவத் தேர்வுகள்

| வ.எண் | தேர்வுக் கட்டண விவரம் | | வரலாறு | தமிழ் |
|---|---|---|---|---|
| 1. | விண்ணப்பக் கட்டணம் | ரூ. | 100 | 100 |
| 2. | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | ரூ. | 100 | 100 |
| 3. | தேர்வுக் கட்டணம் தாள் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் | ரூ | 1400 | 1400 |
| | கூடுதல் | ரூ | **1600** | **1600** |

### ஆ) கட்டணம் செலுத்தும் விவரம்:

- தேர்வுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 01.12.2021
- ரூ.100/- தாமதக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க கடைசி நாள் : 03.12.2021

பருவக் கட்டணங்களை முழுமையாக செலுத்திய மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத இயலும். கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நகல் தேர்வு விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். ஒருமுறை செலுத்தப்பட்ட தேர்வுக் கட்டணங்களை எந்த ஒரு நிலையிலும் மீளப் பெறவோ அல்லது அடுத்து வரும் தேர்வுகளுக்கு ஈடுசெய்யவோ இயலாது. ஒரு பருவத் தேர்விற்கு முதல் முறையாக விண்ணப்பிக்கும்போது அனைத்துத் தாள்களுக்கும் சேர்ந்தே தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். உரிய காலத்தில் தேர்வுக் கட்டணம் செலுத்தாதவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற விவரம் தெரிவிக்கப்பெறுகிறது.

25/11/24

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

<u>பெறுநர்</u>

<u>துறைத்தலைவர்கள்:</u>

1. கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
2. இலக்கியத்துறை
3. இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
4. ஒருங்கிணைந்த முதுகலை மாணவர்கள் (சுற்றுக்கு) - உரிய வழியாக.

<u>நகல்:</u>

1. துணைவேந்தரவர்கள் செயலகம்
2. பதிவாளர் செயலகம்
3. நிதிப்பிரிவு
4. சேர்க்கைப் பிரிவு
5. மக்கள் தொடர்புப் பிரிவு
6. பொறியியல் பிரிவு
7. முனைவர் அ.பா.கார்த்திக் ஆனந்த்பாபு, உதவிப் பேராசிரியர், கணிப்பொறி அறிவியல் துறை

-------------

## இணைப்பு

### ஒருங்கிணைந்த முதுகலை - வரலாறு

**துறை: கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்**

**இரண்டாமாண்டு - நான்காம் பருவம்**

**காலம் : பிற்பகல் 2.00 - பிற்பகல் 5.00 மணி வரை**

| நாள் | பா.கு.எண் | பாட வகை | தாள் தலைப்பு |
|---|---|---|---|
| 06.12.2021 | IMAHTLC-4 | பகுதி - I | பண்டைய இலக்கியம் |
| 07.12.2021 | IMAHELC-4 | பகுதி - II | English - IV -Short Stories |
| 08.12.2021 | IMAHCC-7 | முதன்மைப் பாடம் - 1 | சமகால இந்திய வரலாறு (பொ.ஆ.1947-2000) |
| 09.12.2021 | IMAHCC-8 | முதன்மைப் பாடம் - 2 | இந்திய கலை வரலாறு |
| 10.12.2021 | IMAHAC-4 | இயைவுப் பாடம் - 1 | தஞ்சாவூர் வரலாறு |
| 11.12.2021 | IMAHSBE-2 | | வேலை வாய்ப்பு |
| 13.12.2021 | IMAHNME-1 | | தமிழிலக்கிய வரலாறு |

### ஒருங்கிணைந்த முதுகலை - தமிழ்

**துறை: இலக்கியம் / உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**இரண்டாமாண்டு - நான்காம் பருவம்**

**காலம் : பிற்பகல் 2.00 - பிற்பகல் 5.00 மணி வரை**

| நாள் | பா.கு.எண் | பாட வகை | தாள் தலைப்பு |
|---|---|---|---|
| 06.12.2021 | IMATTLC-4 | பகுதி - I | பண்டைய இலக்கியம் |
| 07.12.2021 | IMATELC-4 | பகுதி - II | English - IV - Short Stories |
| 08.12.2021 | IMATCC-7 | முதன்மைப் பாடம் - 1 | சமய இலக்கியம் |
| 09.12.2021 | IMATCC-8 | முதன்மைப் பாடம் - 2 | புறப்பொருள் வெண்பாமாலை |
| 10.12.2021 | IMATAC-4 | இயைவுப் பாடம் - 1 | கணினித் தமிழ் |
| 11.12.2021 | IMATSBE-2 | | பதிப்பியல் |
| 13.12.2021 | IMATNME-1 | | தொல்லியல் |

30/11/21

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)